# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு விழுப்புரம் வடக்கு-விழுப்புரம் மத்திய-விழுப்புரம் தெற்கு மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!









இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும் அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும் தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் (20.6.2025,) விழுப்புரம் வடக்கு-விழுப்புரம் மத்திய-விழுப்புரம் தெற்கு மாவட்ட சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டு-அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.




ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) நடத்தும் உலக புலம்பெயர்ந்தோர் தினம் விழா சென்னை, தி.நகர் ஹோட்டல் ரெசிடென்ட்சியில் நடைபெற்றது இதில் கழக துணை பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி., சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் இலங்கை தமிழர்கள் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சமூக நல திட்டங்களை பட்டியலிட்டு சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்ச்சியில் – UNHCR–ன் தூதரகத்தின் துணை தலைவர் மார்கரெட் வீன்மா அதிகாரிகள் , வள்ளலார் , சச்சிதானந்தவளன், மூத்த பத்திரிகையாளர் முனைவர். ஆர். கே. ராதாகிருஷ்ணன், ஸ்டார்ட் அப் தமிழ்நாடு, தலைமை நிர்வாக அதிகாரி சிவராஜா ராமநாதன், நேஹா, பார்வதி மீரா, விஜிதரன், சண்முகராஜா, ஜான்சன் உள்ளனர்.



நெய்வேலி, பாரதி விளையாட்டு அரங்கில் யோகா பயிற்சியில் உணவு சாப்பிட்ட 30க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு என்.எல்.சி. மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். தகவல் அறிந்ததும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் நேரில் சென்று மாணவர்களை சந்தித்து மருத்து வர்களிடம் மாணவர்களின் உடல் நலத்தினை கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத் மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள, எம்.சி.. ராஜா அரசு மாணவர் விடுதியில் நேற்று முன்தினம் (20.06.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் விடுதியின் அறைகள் பராமரிப்பு மற்றும் சமையற் கூடத்தில், மாணவர்களுக்கு உணவு பாதுகாப்பாக தயாரித்து வழங்குவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செயலாளர் டாக்டர்.க. மணிவாசன், சுற்றுலா ஆணையர் இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ்,அவர்ஷிர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி.ச.கவிதா, மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் மண்டல மேலாளர்கள் கலந்து கொண்டனர்.